Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 73/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மணிகண்டன் |
| Father's Name | – | தங்கவேல் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 25th October 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed.

**முதல் விசாரணை :**

நான் தற்போது அங்கலக்குறிச்சியில் குடியிருந்து கொண்டு தேங்காய் பருப்பு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 01.01.2017 ம் தேதி இரவு சுமார் 7 மணியளவில் என்னுடைய குடோனுக்கு அருகில் நின்று நான், சம்பத்குமார், ஜாஹிர் உசேன் ஆகிய 3 பேரும் பேசிக்கொண்டிருந்தோம். மேற்படி சம்பத்குமாரின் தாயார் பாக்கியம் என்பவர் கடைக்குச் சென்று பொருள் வாங்கிவருவதாக சம்பத்குமாரிடம் சொல்லிவிட்டுச் சென்றார். சிறிது நேரத்திலேயே ஒரு இனோவா கார் ஒன்று அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் அவருக்கு காதில் இரத்தம் வந்தது. அதே வாகனத்தில் அவரை ஏற்றி அவர் மகன் சம்பத்குமாருடன் பொள்ளாச்சி அருண் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். இரவு 9.30 மணியளவில் விசாரித்தபோது சம்பத்குமாரின் தாயார் இறந்துவிட்டதாகக் கூறினார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் மேற்படி சங்கதிகளைத்தான் கூறினேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் இனோவா காரை யார் ஓட்டிவந்தார் என்பது பற்றி தெரியாது என்றுதான் கூறியுள்ளேன். நானும் சம்பத்குமாரும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது டமார் என்று சத்தம் கேட்டுதான் சம்பவ இடம் சென்று பார்த்தோம் என்றால் சரிதான். அடிபட்ட நபரின் காயத்திற்கு கட்டு போட்டு அதே வாகனத்தில் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றால் சரிதான். சுமார் ½ மணிநேரத்தில் சம்பவ இடத்திற்கு போலிசார் வந்துவிட்டனர்.

இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். இறந்த நபருக்கு வயது சுமார் 70 க்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். இறந்துபோனவருக்கு கண் பார்வை சரியில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. விபத்தில் இறந்துபோன அம்மா மெயின் ரோட்டைக் கடக்கும்போது விபத்து ஏற்பட்டு டப் என்று சத்தம் கேட்டுதான் நாங்கள் போய் பார்த்தோம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் எங்கள் குடோனுக்கும் இடையே சுமார் 50 மீ தொலைவு இருக்கும். சம்பத்குமார் எனக்கு அறிமுகம் ஆனவர் என்றால் சரிதான். வயதான அம்மா சரியாக ரோட்டைப் பார்க்காமல் கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றாலும் அதனால் அவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. சம்பத்குமார் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 73/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | வேலுச்சாமி |
| Father's Name | – | பொன்னுசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 25th October 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed.

**முதல் விசாரணை :**

நான் தற்போது அங்கலக்குறிச்சியில் குடியிருந்து கொண்டு வெல்டிங் வொர்க்ஷாப் வைத்துள்ளேன்.விபத்தில் இறந்துபோனவர் எனது அக்கா ஆகும். கடந்த 01.01.2017 ம் தேதி என் அக்கா பாக்கியம் அவர்களுக்கு சாலை விபத்து ஏற்பட்டதாகக் கேள்விபட்டு நான் பொள்ளாச்சி அருண் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பின்னர் இரவு 9.30 மணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்னர் மறுநாள் அவர் சடலத்தின் மீது பிரேத விசாரணையின் போது நான் சாட்சியாக உடன் இருந்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அக்காவிற்கு வயது சுமார் 75 இருக்கும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.